ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதிவிசேஷமானது

අංක 1987/21 - 2016 ඔක්තෝබර් මස 05 වැනි බදාදා - 2016.10.05
*1987/21 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான், அட்டவணை 01 நிரல் I இல் குறிப்பிடப்பட்ட ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர்ந்த மிகுதிப்பகுதிகள், அதன் நேரொத்த பகுதியின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டுள்ளதுமான பகுதியினை அபிவிருத்திக்கு பொருத்தமானதென கருதுவதனால், அப்பகுதியினை நகர அபிவிருத்திப் பகுதியாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகிறேன்.*

*பாட்டலி சம்பிக்க றணவக்க,*
*பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சர்.*

*பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 17 மற்றும் 18 ஆவது மாடிகள், "சுஹுறுபாய"*
*சுபுதிபுர வீதி,*
*பத்தரமுல்லை,*
*2016, செத்தெம்பர் 20.*

**அட்டவணை 1**

இறக்குவான நகர அபிவிருத்தி பிரதேசம்

*நிரல் I*

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கொடகவில பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதும் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு எல்லைகளாலும் வரை யறைகளாலும் சூழப்பட்ட பகுதியுடன் அமைந்த கிராம அலுவலர் பிரிவுகளான இலக்கம் *231* B, இறக்குவான பட்டினம் இலக்கம் *231*, இறக்குவான வடக்கு (பகுதி) இலக்கம் *231* C, இறக்குவான தெற்கு (பகுதி), இலக்கம் *231* D கொத்தல (பகுதி), இலக்கம் *231* A வெறளுகஹமுல்ல (பகுதி) மற்றும் *237* மசிம்புல்ல (பகுதி) ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

*நிரல் II*

**வடக்கு :**
டெமுவத்த ஆறு மற்றும் வியனகொட வீதியின் மத்திய கோடு சந்திக்குமிடத்திலிருந்து வடகிழக்கு மற்றும் கிழக்கு நோக்கி ஒரு கோடு மாதம்பே - தெனியாய காலி (A*17*) பிரதான வீதியின் மத்திய புள்ளியினூடாக வரையப்படுகின்றது. அங்கிருந்து தென் கிழக்கு, தெற்கு, கிழக்கு மீண்டும் தெற்காக வரையப்பட்ட கோடானது மேலே கூறப்பட்ட வீதியின் மத்திய கோட்டினூடாக மாதம்பே - தெனியாய காலி (A*17*) பிரதான வீதி மற்றும் டெல்வின் வத்த வீதியின் மத்திய புள்ளியின் இடைவெட்டை அடையும் வரை, அங்கிருந்து, ஒரு கோடு



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *1 (தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| | தெற்கு, கிழக்கு, தென்கிழக்கு, வடகிழக்கு அத்துடன் மீண்டும் தென் கிழக்காக டெல்வின் வத்த வீதியின் மத்திய கோட்டினூடாக இறக்குவானை - மசிம்புல்ல - கொடகாவெல வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து ஒருகோடு வடகிழக்கு, வடக்கு வடகிழக்கு மற்றும் கிழக்கு நோக்கி இறக்குவானை - மசிம்புல்ல - கொடகாவெல வீதியின் மத்தியகோட்டினூடாக கருனாரெத்னகம வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை. |
| | **கிழக்கு :** |
| | இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து, கீறப்பட்ட கோடானது தெற்கு மற்றும் தென் கிழக்காக கருனாரெத்னகம வீதியின் மத்திய கோட்டினூடாக கந்தபொல வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து வடகிழக்கு, கிழக்கு, தென்கிழக்கு மற்றும் வட கிழக்காக கந்தபொல வீதியின் மத்திய கோட்டினூடாக கீறப்பட்ட கோடானது இறக்குவானை ஆற்றின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து வடகிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென் மேற்கு, வடமேற்கு, மேற்கு மற்றும் தெற்கே கீறப்பட்ட கோடானது இறக்குவானை ஆற்றின் மத்திய கோட்டினூடாக கல்டொலவின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து தெற்கே, தென் மேற்கு, தென்கிழக்கு, மேற்கு அத்துடன் தெற்காக கல்கொட மத்திய கோட்டினூடாக கீறப்பட்ட கோடானது மாதம்பே - தெனியாய - காலி (A17) மத்திய வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை. |
| | **தெற்கு :** |
| | இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து, மேற்கு, வடக்கு, வடமேற்கு, தென்மேற்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு அத்துடன் வடமேற்கூடாக கீறப்பட்ட கோடானது மாதம்பே-தெனியாய காலி (A17) பிரதான வீதியின் மத்திய கோடும் இறக்குவானை ஆற்றின் மத்திய கோட்டையும் குறுக்கிட்டு அலிரன்வத்த வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து மேற்கு, வடக்கு, வடமேற்கு, மற்றும் வடக்காக அலிரன் வத்தயின் மத்திய கோட்டினூடாக கீறப்பட்ட கோடானது இறக்குவானை - பொதும்பிட்டிய - களவான (B 181) வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து தென்மேற்கு, தெற்கு அத்துடன் மேற்காக இறக்குவானை - பொதும்பிட்டிய - களவானை (B 181) வீதியினூடாக கீறப்பட்ட கோடானது கன்டேகம - கங்கொட வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை. |
| | **மேற்கு :** |
| | இறுதியாக குறிப்பிடப்பட்ட புள்ளியிலிருந்து, வடமேற்கே, தென் மேற்கு, வடமேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, கிழக்கு அத்துடன் வடகிழக்கு நோக்கி கண்டேகம - கங்கொட வீதியின் மத்திய கோட்டினூடாக கீறப்பட்ட கோடானது இறக்குவானை - கங்கொட - பன்னில வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து தென்கிழக்கு, வடகிழக்கு, கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடமேற்காக கீறப்பட்ட கோடானது இறக்குவானை - கங்கொடை - பன்னில வீதியினூடாக கொற்றலடொல வீதியின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து வட கிழக்கு, வடக்கு, கிழக்கு மற்றும் வடமேற்காக கீறப்பட்ட கோடானது கொட்டலதொலவின் மத்திய கோட்டை அடையும் வரை, அதிலிருந்து வடமேற்கு, வடக்கு, மேற்கு, வடமேற்கு அத்துடன் மீண்டும் மேற்காக கொற்றல தொடவின் மத்திய கோட்டினூடாக கீறப்பட்ட கோடானது டெமுவத்த ஆற்றை அடையும் வரை, அதிலிருந்து வடமேற்காக டெமுனுவத்த ஆற்றினூடாக கீறப்பட்ட கோடானது ஆரம்ப புள்ளியை அடையும் வரை. |

10 - 662

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.